# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com


## “அவைகள் தேவனுடைய கிரியைகள் என்பதை நான் ஒத்துக்கொள்ள வேண்டும்!”

### தேவனுடைய அதிரவைக்கும் வல்லமையின் காட்சிகளில் WCDN மருத்துவர்கள்






மக்களில் சிலர் ஜீவனுள்ள தேவனை நம்புவதற்கு உதவியாக தங்களுடைய அறிவை ஒரு ஆவிக்குரிய ஆதாரமாக பயன்படுத்து–கின்றார்கள். வேறு சிலரோ அவர்கள் குறுகிய அறிவின் கட்டமைப்பின்நிமித்தம் தேவன் இருப்பதை நம்பாமல் இருக்கிறார்கள்.

2004ம் ஆண்டு உலக கிறிஸ்தவ மருத்துவ குழுமமானது, ஆழமான படிப்பறிவினால் தேவனை அறியாமல் உள்ளவர்களை விழித்தெழச் செய்யும் நோக்கத்தோடு நிறுவப்பட்டது. அவர்கள் ஆண்டுதோறும் கருத்தரங்கை நடத்தி, மருத்துவ தரவுகளின் அடிப்படையில் தெய்வீக சுகத்தின் சாட்சிகளை வழங்கி கொண்டு வருகிறார்கள். தேவனுடைய சுகமளிக்கும் கிரியைகள் வெளிப்படுகிற கோடை முகாம், சிறப்பு தெய்வீக சுகமளிக்கும் கூட்டங்கள், மற்றும் வெளிநாட்டு படைமுயற்சி கூட்டங்கள் போன்றவற்றில் வியாதியஸ்தர்களின் பதிவு, சாட்சிகளை பதிவு செய்வது, போன்ற பொறுப்புகளை பெற்றுள்ளார்கள்.

ஜூலை 18, 2018ம் தேதி முதற்கொண்டு, WCDN 2018 மான்மின் கோடை முகாமில் சுகம் பெறும்படி வாஞ்சையோடு இருக்கும் வியாதியஸ்தர்களுக்கான பெயர் பதிவை ஆரம்பித்தது. ஒவ்வொரு ஆண்டு கோடை முகாமில் வெளிப்படும் அதிரவைக்கும் வல்லமையின் கிரியைகளின் நிமித்தம், இந்த ஆண்டு வியாதியஸ்தர்களாய் பதிவுசெய்தவர்களின் எண்ணிக்கை கிளை சபை விசுவாசிகளையும் சேர்த்து 1,217 ஆக இருந்தது.

ஆகஸ்டு 6 அன்று நடைபெற்ற முதல் நாளில், பங்குப்பெற்றவர்கள் கைக்குட்டை ஜெபத்தைப் (அப். 19:11–12) பெற்றுக்கொண்டார்கள். அவர்களில் அதிகமானோர் சுகத்தைப் பெற்று, சாட்சி சொல்லும்படி WCDN பூத்திற்கு வந்தார்கள். WCDN–னில் உள்ள அறுவைச் சிகிச்சையாளர்கள், குழந்தைகள் நல மருத்துவர்கள், மனநல மருத்துவர்கள், கதிரியக்க மருத்துவர்கள், பல் மருத்துவர்கள் சாட்சி சொல்ல வந்தவர்களைப் பரிசோதித்தனர். ஜெபத்தைப் பெறுவதற்கு முந்த நிலைமையோடு தற்போதைய நிலையை ஒப்பிட்டுப் பார்த்த பிறகு, சாட்சிகளைப் பதிவு செய்துகொண்டனர். அந்தக் கூட்டம் நடைபெற்ற இடத்தில்தானே 300க்கும் மேற்பட்ட சாட்சிகள் பெறப்பட்டது. கோடை முகாம் நடந்து முடிந்த பிறகும் அதிக சாட்சிகள் வருகின்றன.

Dr. கில்பர்ட் சே, WCDN–னின் தலைவர் சொன்னதாவது, “நான் கொடிதான குணப்படுத்துவதற்கு அரிதான வியாதிகள் சுகமானதைக் கண்டபோது, குறிப்பாக குருடர்கள் பார்வையடைந்து, சக்கர நாற்காலியில் வந்தவர்கள் எழுந்து நின்று நடந்ததைப் பார்த்தபோது மிகவும் பரவசமும் ஆச்சரியமுமடைந்தேன். இன்றைய காலத்தில் பரிணாமக் கொள்கை பரவியிருந்தாலும், WCDN புத்தகங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், ஆண்டு கருத்தரங்குகள் மூலம் சிருஷ்டிகராகிய தேவனையும், அவருடைய வல்லமையால் நிகழ்ந்த ஆச்சரியமான தெய்வீக சுகமான சாட்சிகளை மருத்துவ தரவுகளின் அடிப்படையில் ஆராய்ந்து பறைசாற்றிக் கொண்டு வருகிறது.”

### மான்மின் ஊழியமானது பெரு சர்வதேச கிறிஸ்தவ கருத்தரங்கில் பிரகடனப்படுத்தப்பட்டது




2018 ஆகஸ்டு 17 முதல் 19 வரை சர்வதேச கிறிஸ்தவ கருத்தரங்கு பெரு நாட்டிலுள்ள எல் அப்போசெண்டா அல்டோ சபையில் (பிஷப் ஆல்பர்ட்டோ சாண்டனா) நடைபெற்றது. GCN TV இயக்குனர் மூப்பர் ஜானி கிம், சபையின் சார்பாக அழைப்பை பெற்றிருந்தார்.

பங்குப்பெற்றவர்கள் ஏற்கனவே 2004 பெரு ஒருங்கிணைந்த படைமுயற்சி கூட்டம் மற்றும் எண்லஸ்TV மூலமாக அறிவர். ஜேராக் லீ அவர்களின் வல்லமையான ஊழியத்தை அறிந்திருந்தனர்.

லத்தீன் அமெரிக்காவைச் சார்ந்த சில முக்கியஸ்தர்களான அர்ஜென்டினா சட்ட மாமன்றத்தின் துணைத் தலைவரும், கிறிஸ்டியன் TVயின் தலைவருமான Dr. ஹெக்டர் போனாரிகா மற்றும் கோஸ்டா ரிகா சட்டமன்றத்தின் துணைத் தலைவர் Dr. ஃபேப்ரிஸியோ அல்வராடோவும் சொற்பொழிவை வழங்கினார்கள். தொடர்ச்சியான நான்கு அமர்வுகளில் மூப்பர் ஜானி கிம் அவர்கள் அறிவர். லீ அவர்களின் ஆதியாகம விரிவுரை மற்றும் “சிலுவையின் செய்தி” என்ற பிரசங்கத் தொடர்களின் அடிப்படையில் பேசினார். மேலும், அவர் மான்மின் தலைமை சபையின் வல்லமையான ஊழியம், கலைநிகழ்ச்சி குழுவினர்களின் நிகழ்ச்சிகளை குறித்த காணொளி காட்சிகளை காண்பித்தார். பங்குபெற்ற ஒவ்வொருவரும் மிகுந்த வரவேற்பை அளித்தார்கள்.



போதகர் கிலோங்கோ மிப்லிசி டிசையர்,
புது வாழ்வு சபை, டெல்அவிவ், இஸ்ரேல்

### “பிரசங்கங்கள் அடையாளங்களினால் உறுதியானது!”

நான் 2018 மான்மின் கோடை முகாமில் பங்கு பெற்று, பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்த அநேக ஜனங்களை சந்தித்தேன். நான் தேவனுடைய வல்லமையின் செய்கைகளை அனுபவித்தேன், மிகவும் குறிப்பாக மான்மின் ஊழியத்தையும் அறிந்துகொண்டேன்.

அறிவர். ஜேராக் லீ, மான்மின் தலைமை சபையின் தலைமை போதகர் இஸ்ரேலுக்கு பல முறை வந்திருந்ததால், அவருடைய ஊழியத்தையும் சபையின் கோடை முகாமையும் குறித்து கேள்விப்பட்டு, அதில் பங்குப்பெறும்படி வாஞ்சையடைந்தேன். இந்த இடத்திற்கு வந்த பிறகு, நான் எதிர்பார்த்ததைவிட மிகவும் அதிகமான பிரசன்னத்தை உணர்ந்தேன். என்னால் தேவனுக்கு நன்றியையும் மகிமையையும் செலுத்தாமல் இருக்க முடியவில்லை. நான் தேவனுடைய வல்லமையின் பலத்த செய்கைகளை கண்டேன். ஆண்டவருடைய சீஷர்கள் செய்த அற்புத அடையாளங்களை நானே என் கண் முன்னே கண்ட பிறகு, புதுபெலனையும் ஆவியின் நிறைவையும் பெற்றுக்கொண்டேன்.

அறிவர். லீ அவர்கள், ஜூலை 2007 ஆம் ஆண்டு முதற்கொண்டு மூன்று ஆண்டுகளுக்கு அவருடைய இஸ்ரேல் ஊழியத்தைச் செய்தார். அவர் தேவனுடைய அன்பையும் வல்லமையையும் காண்பித்தார். மேலும், அவர் 2009ம் ஆண்டு இஸ்ரேல் ஒருங்கிணைந்த படைமுயற்சி கூட்டத்தில் இயேசு கிறிஸ்துவே நம்முடைய சொந்த இரட்சகர் என்று மிகுந்த தைரியத்தோடு பிரசங்கித்தார். அவருடைய ஊழியமானது இஸ்ரேலிலுள்ள மேசியானிக் யூதர்கள் மத்தியில் ஒரு எழுப்புதலை கிளப்பியது. போதகர்கள் ஸ்தாபன பாகுபாடின்றி ஒருமனப்பட்டவர்களாய் இணைந்துள்ளார்கள்.

அறிவர். லீ அவர்கள் இஸ்ரேல் மீதான தம்முடைய உண்மையான அன்பை காண்பித்தார். மற்ற எல்லா விஷயங்களிலும்கூட அவர் எங்களுக்கு தொடர்ந்து தாராளமாக உதவுகிறார். ஒருவேளை அவரை நாங்கள் சந்திக்காவிட்டால், இஸ்ரேலிலுள்ள எங்கள் சபைகளில் இப்பொழுது நாங்கள் அனுபவித்து வருகிற எழுப்புதலை ஒருபோதும் கண்டிருக்க முடியாது. ஆண்ட–வருக்குள் எண்ணற்ற ஜனங்களை வழிநடத்துகிற மற்றும் அவருடைய இரண்டாம் வருகைக்காக ஆயத்தமாகின்ற இந்த ஆச்சரியமான ஊழியத்தை நடத்த முடியாமல் போயிருக்கலாம். என்னுடைய இதயக்கனிந்த நன்றியையும், அன்பையும் அறிவர். ஜேராக் லீ அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

# பரத்திலிருந்து வருகிற ஞானம் இணக்கமுள்ளதாயிருக்கிறது

"பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது. நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது" (யாக்கோபு 3:17–18)



**அறிவர். ஜேராக் லீ,**

**தலைமை போதகர், மான்மின் மத்திய திருச்சபை**

- தலைமை போதகர், இயேசு கிறிஸ்துவின் ஒருங்கிணைந்த பரிசுத்த திருச்சபைகள்
- நிரந்தர தலைவர், உலக கிறிஸ்தவ எழுப்புதல் ஐக்கிய ஸ்தாபனம்
- ஸ்தாபகர் & அவைத்தலைவர், உலக கிறிஸ்தவ அலைவரிசைகள் குழுமம் (GCN)
- ஸ்தாபகர் & அவைத்தலைவர், உலக கிறிஸ்தவ மருத்துவர்கள் குழுமம் (WCDN)
- ஸ்தாபகர் & அவைத்தலைவர், மான்மின் சர்வதேச வேதாகம கல்லூரி (MIS)
- ஸ்தாபகர் & அவைத்தலைவர், சர்வதேச பரிசுத்த இறையியல் கல்லூரி
- ஊழியத்தின் முனைவர், தெய்வீகத்தின் (Divinity) கௌரவ டாக்டர் பட்டங்களை உலக நாடுகளின் பிரசித்திப்பெற்ற இறையியல் கல்லூரிகளில் பெற்றவர்.
- அறிவர். லீ அவர்களின் பிரசங்கங்கள் உலகமெங்கிலும் 220 நாடுகளில் பல கிறிஸ்தவ மற்றும் பொது ஊடகங்கள் வழியாக 24 மணி நேரமும் ஒளிபரப்பப்பட்டு வருகிறது.
- அறிவர். லீ அவர்கள் பெரு, காங்கோ மற்றும் பல ஆப்பிரிக்க நாடுகளின் ஜனாதிபதிகள் மற்றும் அநேக அரசியல் தலைவர்களுக்கு கௌரவ தெய்வீக ஆலோசகராய் செயல்பட்டு வருகிறார்.

அவர் அமெரிக்கா; ஜப்பான்; இந்தியா; பாகிஸ்தான்; பிலிப்பைன்ஸ்; அர்ஜென்டினா; ஹோண்டுராஸ், பெரு; ரஷ்யா; ஜெர்மனி; கென்யா; டான்சானியா; உகாண்டா; குடியரசு காங்கோ; இஸ்ரேல்; எஸ்டோனியா மற்றும் உலகத்தின் பல நாடுகளில் படைமுயற்சி கூட்டங்களை நடத்தியுள்ளார்.

தேவன் தம்முடைய அன்பான பிள்ளைகளிடம், "கட்டளைகளைக் கைக்கொண்டு நன்மை செய், நான் உன்னை ஆசீர்வதிப்பேன்" என்று கூறுகிறார். ஆவிக்குரிய ரீதியில் புத்தியீனமாய் இருக்கிறவர்கள் கீழ்ப்படியாமல் தங்கள் சுய ஆதாயத்தைத் தேடுகையில், உலக வழிமுறைகளில் தாங்கள் பெறக்கூடிய ஆதாயத்தை விட தேவன் தரும் ஆசீர்வாதம் மகா பெரியது என்று அவர்கள் அறியும்போது மகிழ்ச்சியோடு கட்டளைகளைக் கைக்கொண்டு நன்மைகளை செய்கிறார்கள்.

நீங்கள் கட்டளைகளைக் கைக்கொண்டு, நன்மை செய்து, பரிசுத்த மாகுதலை அடையப்பெறும்படிக்கு தீமைகளைக் களைந்துப்போட்டு, சமாதானத்தை நாடுகையில், நீங்கள் சாந்தம் மற்றும் இணக்கத்தின் கனியை விளைவிக்கலாம். இந்த இரண்டு கூறுகளும் நீங்கள் எந்தளவாய் உங்கள் இருதயத்தை சத்தியத்தால் பண்படுத்துகிறீர்களோ அந்தளவாய் நீங்கள் பெறுகிற பரந்த இருதயத்திலிருந்தும் சுதந்தரத்திலிருந்தும் வருகின்றன. கடந்த பதிப்பில் சாந்தத்தின் ஞானத்திலிருந்து தொடர்ச்சியாக, நான் இணக்கத்தின் ஞானம் அல்லது பணிதலின் ஞானம், மனப்பூர்வமாக விட்டுக்கொடுத்தலை விளக்குகிறேன்.

## 1. "இணக்கத்தின்" ஆவிக்குரிய அர்த்தம்

இங்கு, "இணக்கமுள்ளதாயிருத்தல்" என்பது ஆவிக்குரிய ரீதியில், "மனப்பூர்வமாக விட்டுக் கொடுத்தலோடு பணிந்திருப்பதை" அர்த்தப் படுத்துகிறது. நீங்கள் இணக்கமுள்ளவர்களாயும் மனப்பூர்வமாக விட்டுக்கொடுத்தலோடு பணியுள்ளவர்களாயும் இருக்கும்போது, நீங்கள் வார்த்தைகள் மற்றும் கிரியைகள்மூலமாக நல்ல அழகான இருதய தூபத்தை காட்ட முடியும். உங்களுடைய இருதயம் நற்குணத்தாலும் சத்தியத்தாலும் நிறைந்திருந்தால், நீங்கள் கொடுக்கிற வார்த்தைகள் நல்ல வார்த்தைகளாக இருக்கும் உங்கள் கிரியைகள் அனைத்தும் அழகானதாக இருக்கும்.

ஆனால் நல்லவர்களாயிருத்தல் என்பது எப்போதும் பணிவுள்ள மென்மையாகவும் சாந்தமாகவும் இருப்பது மாத்திரமல்ல. அது பெலமாயும், தைரியமாயும்கூட இருப்பதாகும். காரணம் நற்குணத்தாலும் சத்தியத்தாலும் நிறைந்த இருதயம் இருளை விரட்டுகிற ஒளியின் அதிகாரமுடையதாயுமிருக்கும். ஆக, மனப்பூர்வமாக விட்டுக் கொடுக்கக்கூடிய பணிவில் நமக்கு இணக்கமிருந்தால், அதாவது உயரிய காரணம் அல்லது தீர்ப்புக்கு விட்டுக்கொடுத்தால், நாம் மற்றவர்களை சத்தியத்திற்கு வழிநடத்தி அவர்கள் இருதயங்களைக் கட்டுப்படுத்த உதவலாம். ஆக, இணக்கத்தின் கனியை விளைவித்திருக்கிற போதகர்கள் மற்றும் பணியாளர்கள் திருச்சபை அங்கத்தினர்களுக்கு ஆலோசனைக் கொடுக்கும்போது, அவர்களுடைய வார்த்தைகளின் அதிகாரம் வித்தியாசமாக இருக்கும்.

இணக்கத்தின் கனியில்லாமல், நீங்கள் யாரொருவருக்காகிலும் ஆலோசனை கூறி பார்ப்பதற்கு அவர் புரிந்துக்கொண்டதைப் போல காணப்பட்டாலும், விரைவில் அது போன்ற பிரச்சனைகளில் மீண்டுமாய் பதிலைக் கேட்பதற்கு வரலாம். நீங்கள் அவனுடைய பிரச்சனையைத் தீர்ப்பதற்கு உங்களது சிறப்பை நீங்கள் முயற்சித்தாலும்கூட, நீங்கள் அவன் மாறாதிருப்பதைப் பார்க்க முடியும். ஆனால் நீங்கள் பணிவுள்ளவர்களாய் மனப்பூர்வமாக விட்டுக் கொடுத்தால், நீங்கள் அவனுக்கிருக்கிற எதிர்மறையான சிந்தனைகள் மற்றும் அவனுடைய எல்லாவித சந்தேகங்களை அவனிலிருந்து துண்டிக்க முடியும். ஒரு சில வார்த்தைகளிலேயே நீங்கள் அவனது சூழ்நிலையை புரிந்துக்கொண்டு அவனுடைய எண்ணங்களை ஆவிக்குரிய எண்ணங்களை பெறுவதற்கு திசைதிருப்ப முடியும்.

வேறுவார்த்தையில், "இணக்கம்" என்பது நல்லவர்களாக மற்றும் சாந்தமாக இருப்பது மட்டுமல்லாமல், சத்தியத்திற்குரிய பலவகையான தேர்ந்தெடுப்புகள் இருக்கும்போது பரிசுத்த ஆவியானவரால் தேவனுக்கு மிகவும் பிரியமானவைகளை தெரிந்தெடுக்க வைக்கிற மற்றும் நம்மை பகுத்தறிய வைக்கிற உயரிய நிலை நற்குணமாய் அது இருக்கிறது.

## 2. "இணக்கத்தின்" மூன்று குணாதிசயங்கள்

### 1) சத்தியத்தின் அடிப்படையில் அவர்களுடைய பிரச்சனைகளின் அம்சத்தை பகுத்தறிவதால் பிறருக்கு அது சமாதானம் தருகிறது.

லூக்கா 12ம் அதிகாரத்தில், ஒருவன் இயேசுவிடம் வந்து அவனுடைய பெற்றோர்களின் ஆஸ்தியைப் பாகம் பிரித்து அவன் வீதத்தை அவனுக்குத் தரும்படி அவன் சகோதரனுக்குக் கட்டளையிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். ஆனால் இயேசுவானவர் அவனுக்குப் பிரதியுத்திரமாக லூக்கா 12:15ல், "பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார்." இவன் தன்னுடைய பேராசையை களைந்துப்போடாத பட்சத்தில், அவன் தொடர்ந்து தன் சகோதரனோடு சச்சரவுகளோடு இருந்திருப்பான். கூடவே, அவன் தன் பேராசையைக் களைந்துப்போடும்போது மட்டுமே அவனால் தேவனிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற முடியும். ஆகவே, இயேசுவானவர் அவனுக்கு ஆசீர்வாதத்தின் உண்மையான வழியைப் போதிப்பதின் மூலமாக அவனுக்கு ஆவிக்குரிய பதிலைத் தந்தார்.

தானியேல் 5ல், பாபிலோன் ராஜாவாகிய பெல்ஷாத்சார் விருந்து வைத்துக் கொண்டிருந்தான். அவன் எருசலேமிலிருந்த தேவனுடைய வீடாகிய ஆலயத்திலிருந்து கொண்டு வரப்பட்ட பொற்பாத்திரங்களை கொண்டு வந்தான். அவன் அவைகளிலிருந்து குடித்து விக்கிரகங்களைப் புகழ்ந்தான். அந்நேரத்தில், மனுஷ கைவிரல்கள் தோன்றி, அரண்மனையின் சாந்து பூசப்பட்ட சுவரிலே எழுதிற்று. ராஜா கலங்கி பயத்தோடு நடுங்கினான். எவன் அந்த எழுத்தை வாசித்து அதின் அர்த்தத்தை வெளிப்படுத்துகிறானோ அவனுக்கு மிகப் பெரிய வெகுமானம் தந்து, ராஜ்யத்திலே மூன்றாம் அதிபதியாக மாற்றுவதாகச் சொன்னான்.

அப்போது ராஜாவின் தகப்பனான நேபுகாத்நேச்சாரால் ஏற்படுத்தப்பட்டிருந்த தானியேல் அழைக்கப்பட்டான். அவனால் அதை வாசித்து அதின் அர்த்தத்தை விளக்க முடிந்தது. அதன் அர்த்தம் என்னவென்றால், ராஜா பெல்ஷாத்சார் தேவனுக்கு முன்பாக ஆணவமாய் நடந்தான். அதன் காரணமாக, அவனுடைய ராஜ்யம் மேதிய பெர்சியர்களுக்கு கையளிக்கப்பட்டது. ராஜா அவன் வாக்குப்பண்ணினபடியே அவனுக்கு பெரும் வெகுமானங்களைக் கொடுத்தான். அவனுக்கு அவன் இரத்தம்பர உடுப்பை தாபரித்து அவனை ராஜ்யத்தின் மூன்றாம் அதிபதியாக்கினான்.

வியாக்கியானத்தைக் கேட்டப் பின்னரும்கூட, எப்படியிருந்தாலும், அவன் வரப்போகிற தேவ நியாயத்தீர்ப்பை ரத்து செய்வதற்கு, அந்தப் பிரச்சனையை தீர்ப்பதைக் குறித்து அவன் ஏதும் செய்யவில்லை. அவன் தன் விருந்தை அனுபவித்தான். அந்த நாள் இரவே, அவன் ராஜ்யத்தை இழந்தான். தேவன் சொன்னபடியே எதிரி படைகளால் கொல்லப்பட்டான். இயற்கைக்கு அப்பாற்பட்ட அப்படிப்பட்ட நிகழ்வின் மூலமாக முன்னமே தேவன் அவனை எச்சரித்தார். தானியேல் அதிசயமான ஞானத்தோடு அவனுக்கு விளக்கினான். ஆயினும் அது பயனில்லாததாகிவிட்டது. ராஜா தனக்குத்தானே இந்த ஞானத்தை அப்பியாசிக்காததால், அவனால் அதிலிருந்து எந்த ஆதாயத்தையும் வருவிக்க முடியாது போய்விட்டது.

அந்த ராஜாவைப் போன்ற மக்கள் இன்றும்கூட இருக்கிறார்கள். அவர்கள் ஆலோசனையைக் கேட்க விரும்புகிறார்கள். ஆனால் அவர்கள் தங்களுக்குத் தானே அதை அப்பியாசிப்பது இல்லை. ஆக, சத்தியத்தால் உங்கள் செயல்களில் உங்களை நீங்கள் மாற்றிக்கொண்டு, உங்கள் குடும்பம் மற்றும் சுற்றியுள்ள மக்கள் மாறுவதற்கு நீங்கள் உதவ முயற்சித்தால் மட்டுமே நீங்கள் நல்ல ஞானத்தால் அவர்கள் மாற உதவிசெய்து, தேவ கிருபைக்கு அவர்களை வழிநடத்த முடியும்.

### 2) அது அமைதியாக தேவ சித்தத்தை பகுத்தறிந்து தன்னிறைவுடன் இருப்பதாகும்.

சில மக்கள் அவர்கள் எதிர்பார்த்தவாறு காரியம் செல்லாதபோது அல்லது அவர்கள் கஷ்டமான சூழ்நிலையில் இருக்கும்போது தங்களது அதிருப்தியை வெளியரங்கமாக காட்டுவார்கள். அவர்கள் படபடப்புடன் இருப்பார்கள், அவர்கள் முக நிறமும் மாறிவிடும். பிறரையும் படபடப்பாக உணரவைத்து விடுவார்கள். குறைகளை கொட்டித் தீர்ப்பார்கள். மேலும் அவர்கள் பழியை பிறர்மேல் போட்டுவிடுவார்கள். ஆனால் இவ்வழியில், அவர்கள் பிரச்சனைகளைத் தீர்க்கமுடியாது. இவ்வகையான செயல்கள் அவர்கள் தேவனுடைய கிரியைகளை அனுபவிப்பதிலிருந்து அவர்களைத் தடுத்துவிடும். மேலும் அவர்கள் மற்றவர்களுடைய இருதயத்தையும் இழக்க நேரிடும்.

இருப்பினும், பணிதலையும் மனப்பூர்வமாக விட்டுக் கொடுத்தலையும் பண்படுத்தியவர்கள் கஷ்டமான சூழ்நிலையிலும் அவர்கள் தங்கள் இருதயத்தில் சௌகரியத்தை இழக்கமாட்டார்கள் (பிலிப்பியர் 4:11–13). அவர்கள் ஆச்சரியப்படவோ அல்லது துக்கப்படவோ மாட்டார்கள். அவர்கள் அமைதியாக தேவ சித்தத்தைப் பகுத்தறிவார்கள். அவர்கள் பெற்ற தேவ கிருபை அவர்களில் அபரிதமாக இருப்பதாலும், தேவ அன்பின் நிச்சயமுள்ளவர்களாய் இருப்பதாலும், அவர்கள் சமாதானமாயிருக்க முடியும். மேலும் கொடுக்கப்பட்ட சூழ்நிலையில் அவர்களால் இயன்ற மிகச் சிறந்த செயலை அவர்கள் தேர்வு செய்வார்கள்.

அவர்கள் படபடக்கவே இல்லை என்பது அர்த்தமல்ல. உண்மைதான்.

**விசுவாசத்தின் அறிக்கை**

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**
**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**
**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**
**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**
**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் (தேவன்)..." (அப். 17:25)

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப். 4:12)

ஆனால் இதன் அர்த்தம் அவர்கள் இருதயத்தின் ஆழத்திற்குள் எந்த ஒரு கிளர்ச்சியில்லாமல் அவர்கள் தேவனை நம்புவதால் அவர்கள் சமாதானத்திலிருக்கிறார்கள் என்பதாகும். அந்த நம்பிக்கை உண்மையாயிருந்தால், தேவன் கட்டாயம் அவர்களை ஆசீர்வதித்து மகிமைப்படுத்துவார் (ரோமர் 8:28).

விசுவாசம் என்பது நாம் விரும்புகிறபடி தேவன் கிரியை செய்ய வேண்டும் என்று அவரை எதிர்ப்பார்ப்பது மட்டுமல்ல. நாம் உண்மையில் விசுவாசித்தால், எந்நேரமும் அவரை சார்ந்துக் கொள்வதால் நாம் தேவசித்தத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். தேவசித்தத்திற்குள் நாம் நம்முடைய வழியை கண்டறிந்து, விசுவாசத்துடன் செயல்பட வேண்டும். நாம் இணக்கத்தோடு நம்முடைய சூழ்நிலையில் தன்னிறைவுடன் இருந்து நற்குணத்தைப் பின்பற்றுவோமானால், பரிசுத்த ஆவியானவர் நம்முடைய வழியிலே எப்போதும் பிரகாசிப்பார்.

மரண பள்ளத்தாக்கிலும்கூட நம்மோடு நடக்கிற தேவனுடைய கிரியைகளை அனுபவிப்பதற்கு இதுவே ஞானம்.

### 3) தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவது மட்டுமல்லாமல் நாம் செய்ய வேண்டியதற்கு அதிகமாக செய்யக்கூடிய குணமாகும்.

இருதயத்தில் இணக்கமுள்ளவர்கள் தேவனை அவர்கள் நேசிப்பதால் தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிவார்கள். மேலும், பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலில் எல்லாவற்றிலும் எது சிறந்தது என அவர்களால் பகுத்தறிய முடியும். தேவன் அவர்களுக்கு ஒரு காரியத்தைக் கட்டளையிட்டால், அவர்கள் தேவனுடைய இருதயத்தைப் புரிந்துக்கொண்டு இரண்டு அல்லது மூன்று அல்லது அதற்கும் மேலாகச் செய்வார்கள். இப்பேர்பட்ட பிள்ளைகளை தேவன் பார்க்கும்போது, “அவர்கள் என் இருதயத்திற்கு ஏற்றவர்கள்” என்று கூறி அவர் பிரியங்கொள்வார்.

சில நேரங்களில் இரண்டு காரியங்களுக்கிடையில் நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கலாம். ஒன்று சத்தியமாகவும், மற்றொன்று சத்தியத்திற்கு புறம்பானதாகவும் இருந்தால், நீங்கள் வெளிப்படையாகவே சத்தியத்தை தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உண்மைதான். ஆனால் இரண்டு காரியங்களுமே சத்தியத்திற்குரியதானால், முக்கால்வாசி ஜனங்கள் அவர்கள் தாங்களே அதிகமாக எதை விரும்புகிறார்களோ அதையே தேர்ந்தெடுக்க விரும்புவார்கள். ஆனால் நமக்கு பரிபூரணமான இணக்கம் இருக்குமேயானால், நாம் தேவனை அதிகமாக மகிமைப்படுத்தக்கூடிய காரியங்களையே தெரிந்தெடுப்போம். இவ்வழிகளில் எவை தேவனை மிகவும் அதிகமாகப் பிரியப்படுத்தும் என நம்மால் சிந்திக்க இயலும். பாபிலோன் தெற்கு யூதா ராஜ்யத்தை படையெடுத்தப்போது சிறைகளாய் அங்கு கொண்டு செல்லப்பட்ட தானியேல் மற்றும் அவனுடைய மூன்று நண்பர்களின் நிலை அதுவாய்தான் இருந்தது.

தானியேல் 1ல், அவர்கள் பாபிலோன் ராஜாவின் அரண்மனையில் வாழ்ந்து ராஜாவின் சிறந்த உணவை உண்ணலானார்கள். ஆனால் இந்த சிறந்த உணவு அநேகமாக தேவ சட்டத்தால் விலக்கப்பட்ட அருவருப்பான ஆகார வகைகளைக் கொண்டிருந்தது. தானியேலும் அவனுடைய மூன்று நண்பர்களும் பிரதானிகளின் தலைவனிடத்தில் விசேஷித்த தயவைக் கேட்டார்கள். அவர்கள் அவனிடம் குடிக்கத் தண்ணீரும் மரக்கறிகளை மாத்திரம் அவர்களுக்குத் தந்து அவர்களது நிலையைப் பத்து நாளைக்குப் பின்பு சோதித்துப் பார்க்கச் சொன்னார்கள். அவர்கள் சமரசம் செய்து அந்த உணவை, “நாங்கள் பாபிலோனில் இருக்கிறோம், இது எங்கள் கட்டுப்பாட்டுக்கு அப்பால் உள்ளது” என்று நினைத்துப் புசித்திருக்கலாம். ஆனால் அவர்கள் சமரசம் செய்யவில்லை. தேவனால் விலக்கப்பட்ட உணவுகளை புசியாதபடிக்கு மரக்கறிகளை மட்டுமே சாப்பிட தன்னார்வப்பட்டார்கள்.

ஆகவே, தேவன் அவர்கள் தோற்றங்கள் ராஜாவின் சிறப்பு உணவை சாப்பிட்ட வாலிபர்களைவிட சிறந்ததாகவும், அதிக புஷ்டியுள்ளதாகவும் இருக்கும்படி கிரியை செய்தார். தானியேலும் அவனுடைய மூன்று நண்பர்களும் எது சரியானதாகவும் அதிக நற்குணம் வாய்ந்ததாகவும் இருந்ததை தெரிந்தெடுத்த அவர்களது இருதயத்தின் காரணத்தால் மிகப் பெரிதான ஆசீர்வாதங்களைகூட பெற்றுக்கொண்டார்கள். பிற்பாடு, அவர்கள் ராஜாவால் அங்கீகரிக்கப்பட்டு உயரிய பதவிகளை அடைந்தார்கள்.

சில நேரங்கள் தேவனுடைய பார்வையில் எது அதிக சரியானதோ அதைத் தெரிந்தெடுப்பது என்பது எளிதல்ல. நாம் அதிக நற்குணம் நிறைந்ததைத் தெரிந்தெடுத்தாலும்கூட, உடனடி ஆசீர்வாதங்களுக்கு பதிலாக சில கஷ்டங்கள் நமக்கு இருக்கலாம். ஆனாலும் அந்த நேரத்திலும்கூட எந்த ஒரு முறுமுறுப்பில்லாமல் அவைகளை ஏற்றுக்கொள்ளத்தக்க மனோபலம் நமக்கு இருக்க வேண்டும். நாம் தேவன் பேரில் பலமான நம்பிக்கை கொண்டிருக்கும்போது மட்டுமே நம்மால் இதைச் செய்ய முடியும். கூடுதலாக, பிரதானிகளின் தலைவனிடத்தில் இப்பேர்பட்ட தயவை அவர்கள் கேட்பதற்கு இயலும் வரையில் தானியேலுக்கும் அவனது நண்பர்களுக்கும் எத்தகைய மனப்பான்மை இருந்ததென்பதை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். அவர்கள் பிரதானிகளின் தலைவனுக்கு முன்பதாகவும் மற்ற மக்களுக்கு முன்பதாகவும் மிகவும் நல்லவர்களாய், உண்மையுள்ளவர்களாய், அருமையானவர்களாய் இருந்தார்கள். அவர்கள் போதுமான அளவு தங்கள் நற்கிரியைகளை சேர்த்து வைத்திருந்தார்கள். அதனால் முக்கியமான தருணத்தில் தேவனால் பிரதானிகளின் தலைவனுடைய இருதயத்தை அசைக்க முடிந்தது.

நீங்கள் தேவனுடைய பார்வையில் உங்கள் விசுவாசத்தைக் காட்டும்போது, சில நேரங்களில் பிறருடைய புரிந்துகொள்ளுதல் அல்லது உதவி உங்களுக்கு தேவைப்படுகிறது. நீங்கள் சபை நிகழ்வு ஒன்றில் பங்குப்பெற வேண்டும் என்று நினைத்துக்கொள்வோம். ஆனால் உங்களது வேலை அட்டவணையால் வேலையிலிருந்தோ அல்லது குடும்ப கூட்டத்திற்கு செல்ல வேண்டும் என்பதால் விடுப்பு எடுக்க இயலவில்லை. நீங்கள் மற்ற மக்கள் அல்லது குடும்ப அங்கத்தினர்களுடைய உதவியை தயவை கேட்க வேண்டும். இப்படிச் செய்வதற்கு, நீங்கள் உங்கள் அநுதின வாழ்வில் நற்குணத்தின் கிரியைகளை குவித்து வைக்க வேண்டும். நீங்கள் ஊக்கமாக வேலை செய்து, மற்றவர்களிடம் அங்கீகாரம் பெற்று, பிறருக்கு தீங்கு செய்யாதிருக்க வேண்டும். உங்களால் குடும்ப கூட்டங்களில் பங்குப்பெற இயலாவிட்டாலும், உங்கள் குடும்ப அங்கத்தினர்களின் இருதயத்தை நீங்கள் அசைக்கவும் வேண்டும். நீங்கள் விரும்பியவற்றை செய்து அவர்கள் உங்களை புரிந்துக் கொள்ளும்படி கேட்டால், அது உங்களது பேராசை.

## 3. அபரிதமான இணக்கமுள்ள அப்போஸ்தலனாகிய பவுல்

### 1) அவனது ஆசை ஆத்துமாக்களை ஸ்தம்பிக்க செய்யாதிருப்பது

பவுல் ஆண்டவரை அறிவதற்கு முன்னதாககூட, அவன் முழுமையுமாக தேவ சட்டங்களைக் கைக்கொண்டான். அவன் ஆண்டவரைச் சந்தித்த பின்னர், அவன் தனதெல்லாவற்றையும் காரியங்களைக்கூட அவன் அனுபவிக்கவில்லை. உதாரணமாக, 1 கொரிந்தியர் 8:13 சொல்கிறது, “ஆதலால் போஜனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காதபடிக்கு, என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பேன்.”

அந்நேரத்தில், கொரிந்துவில் அதிகமான விக்கிரக வழிபாடுகள் இருந்தது. மேலும் சந்தைகளில் விற்கப்பட்ட இறைச்சி விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதாயிருந்தது. அதனால் மக்கள் அறியாமலே ஒரு நேரம் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளை சில இறைச்சியாக வாங்க நேர்ந்தது. அவர்கள் இது தேவனால் ஏற்கப்படுமா என்று ஆட்சேபித்துக் கொண்டிருந்தனர். அது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதென்று விசுவாசி அறிந்திருந்தால், அதை அவன் புசியாமலிருப்பது அவனுக்கு நல்லது. உண்மைதான். ஆனால், அவன் அது எங்கிருந்து வந்தது என்று அறியாதிருந்தால் அல்லது அறியமுடியவில்லையானால் அதைப் புசிக்கலாம். பின்பு அவன் அந்த இறைச்சியைப் புசித்தாலும் அது பாவமல்ல (ரோமர் 14). அவன் அதை உணவாக மட்டுமே புசிக்கிறான், விக்கிரகங்களில் பங்குப்பெறும் ஒரு பகுதியாக அல்ல.

ஆனால் பெலவீனமான விசுவாசமுடையவர்கள், விக்கிரகங்களுக்கு ஒரு முறை படைக்கப்பட்டவைகளை புசிக்க விரும்பாமல் இருந்திருக்கலாம். கூடவே, அப்போஸ்தலனாகிய பவுல் அந்த உணவை சாப்பிடுவதைக் காண்பதால், அவர்கள் அவன் விக்கிரகங்களில் பங்குப் பெறுகிறான் என்று நினைத்திருப்பார்கள். அல்லது அவர்கள், “ஓ, பவுலைப் போன்றோர் விக்கிரகங்களுக்கு பலியிடப்பட்டவைகளை புசித்தால், நானும்கூட புசிக்கலாமே” என்று நினைத்திருக்கலாம். பவுலின் விசுவாசத்தில், அதைப் புசிப்பது என்பது ஒரு பொருட்டல்ல. ஆனால் அவன் தன்னைப் பார்க்கிறவன் ஸ்தம்பித்து விடுவான் என்ற பயத்தில் அவன் அவ்வகை உணவுகளை உண்ணவில்லை. அவன் ஆத்துமாக்களுக்கு இடறலுண்டாக்காதபடிக்கு என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பதை அவன் தெரிந்துகொள்ள விரும்பினான்.

### 2) அவன் தன் உரிமையையும் அதிகாரத்தையும் விட்டு விடுவதற்கு அவனது மனப்பூர்வம்

அப்போஸ்தலனாகிய பவுல் மற்றவர்கள் செய்ததுபோல திருமணம் செய்து தானே அனுபவிக்கும் உரிமையை விட்டுக் கொடுத்தான். அதனால் அப்பேர்பட்ட காரியங்கள் சுவிசேஷம் பிரசங்கிப்பதற்கு தடையாக வராதிருப்பதற்கு அப்படி செய்தான். அவன் விசுவாசிகளால் ஆதரிக்கப்பட வேண்டும் என்ற உரிமையையும்கூட விட்டுவிட்டான். உண்மையில் போதகர்கள் தேவனுடைய வார்த்தையிலும் ஜெபத்திலும் தங்களை அர்ப்பணித்திருப்பதற்கு திருச்சபை அங்கத்தினர்களிடமிருந்து அத்தியாவசியங்கள் கொடுக்கப்பட்டன. ஆனால் பவுல் வேலை செய்து தன் சொந்த தேவைகளை தானே சந்தித்து பூர்த்தி செய்தான். அதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தன என்பது உண்மைதான். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக அவன் அவர்களை நேசித்தபடியால் அங்கத்தினர்களை அவன் பாரப்படுத்த விரும்பவில்லை.

தேவன் பவுலின்மீது பிரியங்கொண்டு மற்ற அப்போஸ்தலர்களைவிட அதிக வல்லமையான கிரியைகளை வெளிப்படுத்தும்படி செய்தார். கூடவே, அவன் அங்கத்தினர்களின் கேள்விகளுக்கு மிகத் தெளிவான பதில்களை கொடுப்பதற்கு ஏதுவாக தேவன் அவனுக்கு தெளிவான உந்துதலையும் மிகப்பெரிய ஞானத்தையும் கொடுத்தார். மேலும் வல்லமையான கிரியைகளோடு, அவன் எண்ணற்ற ஆத்துமாக்களை இரட்சிப்புக்கு நேராகவும் தேவன் விரும்புகிற திசைக்கு நேராகவும் வழிநடத்தினான்.

நீங்கள் இணக்கத்தின் இருதயத்தை அல்லது மனப்பூர்வமாக விட்டுக் கொடுத்தலோடு பணிவின் இருதயத்தை அடையப்பெறும்போது, நீங்கள் எப்போதும் நற்குணத்தை தெரிந்தெடுக்கலாம். நீங்கள் ஏதோ மறைவான நோக்கம் அல்லது யாரோ ஒருவர் உங்களை கவனிக்கும் காரணத்தால் அல்லாமல் நற்குணத்தை தெரிந்துக் கொள்வீர்கள். இது நீங்கள் தேவனை அதிகமாய் பிரியப்படுத்த வேண்டும் என்ற காரணத்தால். அதாவது உங்கள் இருதயத்தை நிரப்புகிற நற்குணம் நிரம்பி வழிந்து இயல்பாகவே உங்கள் வார்த்தைகளில் செயல்களில் வெளிவரும். போதகர்களும் தலைவர்களும் எல்லாவற்றிலும் நல்ல உதாரணங்களை காண்பிக்க வேண்டியதாலும், சில நேரங்களில் தேவனை மகிமைப்படுத்துவதற்காக அவர்கள் செய்ய வேண்டியதல்லாத காரியங்களை செய்வதற்கு இந்த இணக்கத்தின் இருதயத்தை கட்டாயம் அடையப் பெற வேண்டும்.

ஆக, நாம் ஏதாகிலும் செய்தால், அது சத்தியத்திற்குரியதாக இருந்தாலும்கூட, நாம் தாழ்மையோடு மீண்டும் ஒருவிசையாக அது தேவனுடைய பார்வையில் சரியானதா என்று பரிசோதித்து அவருக்கு எது அதிகப் பிரியமோ அதைத் தெரிந்தெடுக்க வேண்டும். அப்போது, நாம் எல்லாவற்றையும் அதிக ஞானத்தோடு செய்ய முடியும். தேவனுக்கு மிகவும் பிரியமான காரியங்களை நாம் தெரிந்து கொண்டால், அதுதான் உண்மையான ஞானம். கூடவே, நாம் சுயநல நோக்கங்களை எவ்வளவாய் தூக்கி எறிகிறோமோ அந்தளவாய் தேவனுக்கு எது அதிக பிரியமென்று நாம் பகுத்தறிய முடியும்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, நீங்கள் நித்தியமான பரலோகத்தை அடையும்போது, நீங்கள் உங்கள் ஆசை நம்பிக்கை அனைத்தையும் நினைவுகூர்ந்து அழகான வாசஸ்தலங்களையும் வெகுமதிகளையும் கொடுக்கிற தேவனுக்கு அன்போடும் கண்ணீரோடும் நன்றி அறிக்கைகளை கொடுப்பீர்கள். தேவனுக்குப் பிரியமானவற்றை தெரிந்தெடுப்பதற்கு இணக்கத்தின் ஞானத்தைப் பெற்று பரம ராஜ்யத்தில் மிக அழகான புதிய எருசலேமிற்குள் நுழையும்படிக்கு ஆண்டவருடைய நாமத்தில் ஜெபிக்கிறேன்.

## “மான்மின் கோடை முகாமில் ஆசீர்வாதங்களும் பதில்களும் பொங்கி வழிகின்றன!”



**சகோதரி யூலியா கோரேலோவா, வயது 42, இங்கிலாந்து**

2008ல் TBN ரஷ்யாவிலே அறிவர். ஜேராக் லீ அவர்களது பிரசங்கங்களைக் கேட்ட பின்னர், எனது குடும்பம் ஆன்லைனில் மான்மின் மத்திய திருச்சபையின் ஆராதனைகளிலும் தானியேல் ஜெபக்கூட்டத்திலும் பங்குப்பெற்றது. 2011ல் இங்கிலாந்திற்கு சென்ற பின் நான்கு ஆண்டுகளாக எனக்கு க்ரீன் கார்டு பெறுவது மிக கடினமாக இருந்தது. ஆனால், அறிவர். ஜேராக் லீ அவர்களது ஜெபத்தைப் பெற்ற பின்னர், நான் உடனடியாக கார்டை பெற்றுக் கொண்டேன். 2013 துவங்கி ஒவ்வொரு வருடமும் மான்மின் கோடை ஏகாந்தத்தில் பங்குப்பெற்று வருகிறேன்.

2016ல், நான் ஆச்சரியமான கிரியை ஒன்றை அனுபவித்தேன். எனது மூத்த மகன் மனஇறுக்க வியாதி கொண்டவன். ஆனால் அவனது அறிகுறிகள் கோடை முகாமில் தேறியது. அவன் தன் தலையை முட்டி, கூச்சலிட்டு அடிக்கடி கோபத்தில் கொந்தளிப்பான். அவன் எனக்கோ என் கணவருடைய வார்த்தைகளுக்கோ பதில் கொடுத்ததில்லை. அவனைச் சுற்றியுள்ள பொருட்களையும் அறிந்துணர்ந்ததில்லை. அவன் மிருகம் போன்ற சப்தங்களை எழுப்பி ஒன்றும் சொல்லமாட்டான். ஆனால் ஏகாந்தத்தில் தலைமை போதகருடைய வியாதியஸ்தருக்கான ஜெபத்தைப் பெற்ற பின்னர், அவன் கத்துவதை நிறுத்திவிட்டு எங்களுக்கு பதிலளிக்க ஆரம்பித்தான். அவனை நாங்கள் கதவைப் பூட்டச் சொன்னபோது, அவன் கதவைப் பூட்டினான். கொஞ்சம் மழை பெய்தபோது, அவன், ‘மழை’ என்றான். அவனால் சாப்பாட்டில் ஒன்றிலிருந்து ஒன்றை வித்தியாசம் காணமுடிகிறது. 2017 கோடை முகாமில் ஜெபத்தைப் பெற்ற பின், அவன் தானாகவே தன் பெல்டை போட்டுக் கொள்கிறான். “அப்பா” மற்றும் “அம்மா” ஆகிய வார்த்தைகளைச் சொல்கிறான். அவன் தன்னை வெளிப்படுத்துகிறான். அல்லேலூயா!

எனது மூத்த மகன் அதிகமாக தேறியுள்ளான். 2018ல் நான் எனது இரண்டாவது மகனுடன் வந்தேன். ஆசீர்வாதங்களும் பதில்களும் நிரம்பி வழிகிற மான்மின் கோடை முகாமில் சேர்ந்துக் கொள்வதில் நாங்கள் சந்தோஷமடைகிறோம்.





# “நான் அனுபவித்ததிலேயே தேவனுடைய வல்லமை பெரிய ஆச்சரியமான கிருபை!”




Dr. ஹியுவெய் யென், வயது 34, சிங்கப்பூர் மான்மின் சபை

நான் ஒரு குடும்ப நல மருத்துவர். நிஜத்தில், நான் கடவுள் இருக்கிறார் என்று நம்பவில்லை. ஆனால் மரித்தப் பிறகு ஒரு வாழ்க்கை இருக்கலாம் என்ற பயம் இருந்ததால், ஒரு நல்ல மனிதனாக இருக்கும்படி என் சிறந்ததை முயற்சித்தேன். இருந்தும், எல்லா காரியங்களிலும் மிகுந்த மோசமான நிலையை யோசித்தேன். இதனால் நான் எப்பொழுதும் ஒருவித நடுக்கத்தில் இருந்தேன், அது என்னை அடிக்கடி கோபப்பட வைத்தது.

ஒரு நாளில், நான் என் பயணத்தில் தங்கியிருந்த ஹோட்டலின் மேசையில் இருந்த ஒரு வேதாகமத்தை வாசிக்க நேர்ந்தது. அதில் இருந்த அநேக காரியங்களை என்னால் புரிந்துகொள்ள முடிய வில்லை. அதை நான் வாசித்தபோது ஏன் தேவன் ஏதேனின் தோட்டத்தில் நன்மைதீமை அறியத்தக்க மரத்தை நாட்டினார், ஏன் அவர் நரகத்தை ஆயத்தம்பண்ணினார் என்று ஆச்சரியப்பட்டேன். மற்ற அநேக கேள்விகள் எனக்குள் எழுந்ததால், பரிசுத்த வேதாகமத் திலுள்ளதை நம்புவது எனக்கு மிகவும் கஷ்டமாகத் தெரிந்தது. என் கேள்விகளுக்கான பதில்களை என்னுடைய கிறிஸ்தவ நண்பர்களிடம் கேட்டிருக்கிறேன், அவர்களில் ஒருவரும் எனக்குப் பதில் சொல்லவில்லை. அவர்களில் ஒருவன் என்னிடம், “நீ முதலாவது நம்பு. பரலோகம் சென்ற பிறகு தேவனிடத்தில் உன் கேள்விக்கான பதில்களை கேள்” என்று சொன்னான்.

*

ஆகஸ்டு 2016ல், என்னுடைய நண்பரான Dr. டேவிட் இயு என்னிடம் அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஊழியம் மற்றும் தேவனுடைய வல்லமையை மருத்துவ ஆதாரத்தோடு நிரூபிக்கும் உலக கிறிஸ்தவ மருத்துவ குழுமத்தைப் பற்றி பேசினார். அவருடைய மனைவி, மிஷனரி வாங்பிங் பிங், சிங்கப்பூர் மான்மின் சபையில் ஊழியக்காரியாக இருக்கிறார்கள். அவள் என்னிடம் சிலுவையின் செய்தி என்ற புத்தகத்தை கொடுத்தாள். அந்தப் புத்தகமானது என்னை திடுக்கிட வைத்த அறிவொளி போன்றிருந்தது. காரணம், என் கேள்விகள் அனைத்தையும் அந்தப் புத்தகம் விளக்கியது!

மேலும், நான் தீராத வியாதிகளும் அறிவர். லீ அவர்களின் ஜெபத்தினால் சுகமாவதை கண்டேன். என் மாம்ச சிந்தைகள் அகன்றுப் போனதால் நான் முடிவாக ஆண்டவரை ஏற்றுக் கொண்டேன். என் வாழ்நாளில் நான் அனுபவித்த மிகுந்த ஆச்சரியமான காரியம் தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்துவதே. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக இயேசு வியாதிக்காரர்களை சுகமாக்கிய வேதாகம நிகழ்வுகள் என் கண்முன்னே நடைபெறுவதை கண்டேன்! தேவன் நமக்கு உதவி செய்யும்படி அறிவர். லீ அவர்களை தெரிந்து கொண்டுள்ளார் என்பதை நம்பினேன். மான்மின் தலைமை சபையும்கூட தேவன் தாமே தெரிந்தெடுத்த சபையென்று விசுவாசிக்கிறேன்.

*

நான் ஒரு மருத்துவர், ஆனால் சில சமயங்களில் நோயாளிகளிடம் அவர்களுடைய வியாதிக்கான காரணம் தெரியாததால், அதைச் சொல்ல தெரியாத நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறேன். ஆனால் இப்பொழுது தலைமை போதகரின் செய்திகளின்மூலம் வியாதிக்கான வேரை கற்றுக்கொண்டதால் என்னால் சொல்ல முடியும். என்னிடம் வருகிற நோயாளிகளுக்கு உதவி தேவைப்படும் நேரத்தில், WCDN கருத்தரங்குகளில் சொல்லப்பட்ட சாட்சிகளை சொல்கிறேன். நான் அவர்களிடம், “நம்பிக்கையை இழக்காதீர்கள். தேவன் உங்களுக்கு நிச்சயம் உதவுவார்” என்று உற்சாகப்படுத்துகிறேன்.

விசுவாச ஜெபத்தினாலும் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தினாலும் WCDN மருத்துவ தரவுகளை கொண்டு சுகமான சாட்சிகளை சான்றளித்து கொண்டு வருகிறது. அவர்கள் எல்லா வியாதிகளும் ஆவிக்குரிய காரணத்தால் உருவாகிறது என்று முக்கியப்படுத்துவதன் மூலம், மருத்துவர்கள் நோயாளிகளுக்கு இன்னும் சிறப்பான விதத்தில் உதவி செய்ய முடிகிறது. நானும்கூட தலைமை போதகர் மூலமாக நிகழ்கின்ற வல்லமையான கிரியைகளினால் ஆச்சரிய மடைகிறேன். அவருடைய ஜெபத்தினால் நவீன மருத்துவதால் குணப்படுத்த முடியாத தோல், நரம்பியல், சுவாசம், இருதயம், இரைப்பை நோய்கள், பக்கவாதம், குருட்டுத்தன்மை, செவிடு, நோய் எதிர்ப்பு மண்டல தன்னிச்சை கோளாறு மற்றும் புற்றுநோய் போன்றவற்றிலிருந்து சுகமடைந்த திரளான சாட்சிகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

*

2018 ஆகஸ்டு மாதத்தில், முந்தைய ஆண்டு பங்குப்பெற்றதுபோல இந்த ஆண்டும் மான்மின் கோடை முகாமில் பங்குப்பெற்று, அநேக மக்கள் பல நோய்களிலிருந்து சுகமடைந்ததைப் பார்த்தேன். தேசிய அளவில் அனல் காற்று வீசும் என்ற எச்சரிப்பு கொடுத்தும், முகாம் நடைபெற்ற இடத்தில் உகந்த தட்பவெட்பநிலை நிலவிய அதிசயத்தையும் அனுபவித்தேன். இதுபோன்ற ஒரு சமாதானத்தையும், சந்தோஷத்தையும் இதற்கு முன்பு நான் அனுபவித்ததே இல்லை; இப்பொழுது பரலோகத்திற்கான நம்பிக்கையாலும் சந்தோஷத்தாலும் நிறைந்துள்ளேன். நான் சகல நன்றிகளையும் மகிமையையும் தேவனுக்கே செலுத்துகிறேன். என் வாழ்க்கையின் உண்மையான மதிப்பை அறிந்து கொள்ள என்னை வழிநடத்திக்கொண்டு வருகிற தலைமை போதகருக்கும் நன்றி செலுத்துகிறேன்.

# “என் வலது காது முடிவாக திறந்தது!”

கண்காணியாள் ஹெய்ஜின் ச்சோ, வயது 49, 5வது மாகாணம், மான்மின் தலைமை சபை



நான் செவிடாய் பிறந்தவள். என்னுடைய ஏழாவது வயதிலிருந்து என் வலது காதில் காதுகேள் கருவியை அணிந்துகொண்டு வந்தேன். அதனால் மக்கள் பேசுகிறார்கள் என்ற சத்தம் கேட்டாலும், என்னால் முற்றிலுமாய் அதை புரிந்துகொள்ள முடியாது. என்னுடைய ஒன்பதாம் வயதிலிருந்து ஒரு சபையில் பங்குப்பெற துவங்கினேன். பரலோகம் என்று ஒன்று நிஜமாய் இருக்கிறது என்பதை கற்றுக்கொண்ட போது, நான் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் உணர்ந்தேன்.

ஜூலை 2018ல், என் கணவரோடு மான்மின் தலைமை சபைக்கு வழிநடத்தப்பட்டேன். நான் “சிலுவையின் செய்தி” மற்றும் “விசுவாசத்தின் அளவு” போன்ற தலைமை போதகருடைய ஆவிக்குரிய செய்திகளினால் ஆச்சரிய மடைந்தேன். என்னுடைய கணவர், போதகர் ஜங்வுன் ஜி தலைமை போதகருடைய செய்திகளினால் மிகுந்த கிருபையை பெற்றுக்கொண்டதால், மலேசியாவிலுள்ள திரளான செவிட்டு மக்களுக்கு வீடியோ கான்ப்பரன்ஸ் மூலமாக பரிசுத்த சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். செவிடானோருக்கான பினாங்கு மான்மின் சபை 2010ல் ஸ்தாபிக்கப்பட்டபொழுது, என்னுடைய கணவர் சபையில் ஊழியராய் நியமிக்கப்பட்டார். அது முதற்கொண்டு, அவர் மான்மின் ஊழியத்தை தாய்லாந்து, ஜெர்மனி, டென்மார்க் மற்றும் பிற நாடுகளிலுள்ள அநேக செவிட்டு மக்களுக்கு அறிவித்து கொண்டு வருகிறார்.

*

தலைமை போதகருடைய ஜெபத்தினால் திரளானோர் சுகம்பெறுகிறார்கள் என்பதை நான் கேள்விப்பட்டேன். குறிப்பாக, என் கணவர் உள்பட அநேக செவிடானோர் ஜெபத்தினால் கேட்க ஆரம்பித்தபோது, நானும் கேட்கும் திறனைப் பெற்றுக்கொள்ள விரும்பி, உற்சாகமடைந்தேன். இதற்கிடையில், டிசம்பர் 2017ல் என்னுடைய வலது காதில் இரைச்சல் கேட்கத் துவங்கியது. என்னால் காதுகேள் கருவியை பயன்படுத்த முடியவில்லை. இதனால் சீக்கிரம் சுகமடைய வாஞ்சித்தேன். நான் தானியேல் ஜெபக்கூட்டத்தில் துதிக்கும்வேளையில், “தேவனே, இந்த பாடலின் சத்தத்தை நான் கேட்க வேண்டும்” என்று ஜெபித்தேன். 2018 மான்மின் கோடை முகாம் நெருங்கி கொண்டிருந்தவேளையில், நான் அதிகமதிகமாக ஊக்கமடைந்தேன். என் காது திறக்கப்பட விருப்பமும் வாஞ்சையும் பெருகினதால், ஆராதனையில் சைகை மொழியில் செவிடானோருக்கு என் கணவரோடு இணைந்து நானும் உதவிசெய்தேன். நான் ஜெபத்தையும், உபவாசத்தையும் ஏறெடுத்தேன்.

கோடை முகாமின் முதல் நாளில், உயர்திரு. சூஜின் லீ அவர்கள் மேடையிலிருந்து தலைமை போதகர் ஜெபித்துக் கொடுத்த கைக்குட்டையை (அப். 19:11–12) வைத்து ஜெபித்தார். நானும்கூட மான்மின் ஜெபமையத்தின் தலைவி போக்னிம் லீ அவர்களின் ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன். திருமதி. லீ என்மேல் கைக்குட்டையை வைத்து ஜெபித்தபோது, பரிசுத்த ஆவியானவரின் அக்கினி என்மேல் வந்திறங்கியது, நான் “பாங்!” என்ற ஒரு சத்தத்தைக் கேட்டேன். அடுத்த நாளில், நான் காதுகேள் கருவியை அணியவில்லை, ஆனால் என் வலது காது வழியாக துதிப்பாடலின் சத்தத்தை கேட்டேன்!

என்னால் இப்பொழுது தெளிவாய் கேட்க முடிகிறது. நான் சந்தோஷத்திலும், கிருபையிலும் நிறைந்துள்ளேன். இப்பொழுதெல்லாம் நான் தேவனுக்கு கண்ணீரோடு என் நன்றியின் ஜெபத்தை ஏறெடுக்கிறேன். என் மரித்த நரம்புகளை புதிதாக்கி, மறு–சிருஷ்டிப்பின் வல்லமையினால் நான் கேட்கும்படி எனக்குள் கிரியை நடப்பித்த தேவனுக்கு என் நன்றிகளையும் மகிமையையும் செலுத்துகிறேன்.

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com